**செய்தி வெளியீடு எண்: 055** **நாள்: 19.01.2018**

**<u>அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம், சென்னை–28</u>**

2017 முதன்மை தேர்வில் (UPSC) வெற்றி பெற்ற தமிழ் நாட்டை சார்ந்த மாணவ/மாணவியர்கள், மூன்று புகைப்படத்துடன், மத்திய தேர்வாணைக் குழு முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்ப நகலுடனும், தங்களது பெயரையும், மற்ற விவரங்களையும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், 'காஞ்சி' 163/1 பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை – 600 028–ல் பதிவு செய்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்கள் 044–24621909, 044–24621475. விண்ணப்பப் படிவம் பயிற்சி மைய வளைதளத்தில் www.civilservicecoaching.com பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து மேற்குறித்த அலுவலகத்தில் சமர்பிக்கலாம்.

ஆளுமைத் தேர்வுக்கு செல்லும் தகுதி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, இப்பயிற்சி மையத்தில், மூத்த இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி அலுவலர்களையும் கல்லூரிகளின் பேராசிரியர்களையும் கொண்டு, மாதிரி ஆளுமைத் தேர்வும், சிறப்பு வகுப்புகளும், நடத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதிரி ஆளுமைத் தேர்வும் பயிற்சிகளும் அளிக்கப் படுகின்றன. ஆளுமைத் தேர்வுக்கு, புது டெல்லி செல்லும் மாணவ/மாணவியர்களுக்கு பயணப்படியாக ரூ.2000/–மும் பத்து நாட்கள் தமிழ் நாடு இல்லத்தில் தங்கி ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ள ஏற்பாடுகளும் இப்பயிற்சி மையத்தால் செய்யப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**